## முஸாபஹா செய்யும்போது அல்லாஹ்வைப் புகழுதல் :

**18594 – حَدَّثَنَا حَسَنُ بْنُ مُوسَى، حَدَّثَنَا زُهَيْرٌ، حَدَّثَنَا أَبُو بَلْجٍ يَحْيَى بْنُ أَبِي سُلَيْمٍ قَالَ: حَدَّثَنِي أَبُو الْحَكَمِ عَلِيٌّ الْبَصْرِيُّ، عَنْ أَبِي [ص:558] بَحْرٍ، عَنِ الْبَرَاءِ، أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «أَيُّمَا مُسْلِمَيْنِ الْتَقَيَا، فَأَخَذَ أَحَدُهُمَا بِيَدِ صَاحِبِهِ، ثُمَّ حَمِدَ اللَّهَ، تَفَرَّقَا لَيْسَ بَيْنَهُمَا خَطِيئَةٌ»**

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : இரண்டு முஸ்லிம்கள் சந்தித்து, அதில் ஒருவர் மற்றவருடைய கையைப்பிடித்து, பிறகு அல்லாஹ்வைப் புகழ்ந்து அவர்கள் பிரிந்து சென்றால், அவர்களுக்கு மத்தியிலே எந்தத் தவறும் இல்லாதவர்களாக அவர்கள் பிரிந்து செல்வார்ள்.** ( அஹ்மத் : 18594 )

மேலேயுள்ள அஹ்மதில் வந்துள்ள ஹதீஸை மீளாய்வு செய்த அர்னஊத் என்பவர் ‘‘இது ஸஹீஹுன் லி கய்ரிஹி – அறிவிப்பாளர் வரிசையில் வேறு அறிவிப்புக்களைக் கொண்டு ஸஹீஹாக இருந்தாலும், ‘ஹமிதல்லாஹு‘ - பிறகு அவர்கள் **அல்லாஹ்வைப் புகழ்ந்து** என்று வரக்கூடிய விடயம் லயீபானது என்று கூறுகின்றார். இந்த அறிவிப்பில் இழ்திராபும் (குளறுபடியும்) காணப்படுகின்து. அதேபோன்று மஜ்ஹூலும் காணப்படுகின்றது. இதில் வரக்கூடிய ஸைத் இப்னு அபீ அஸ்ஸாஸா (அபுல் ஹகம் அலி அல்பஸரிய்யு) என்பவர் அறியப்படாத மஜ்ஹூலாக இருக்கின்றார். ஆனாலும் இவரை இப்னு ஹிப்பான் - நம்பகத்தன்மையானவர் என்று குறிப்பிடுகின்றார். இப்னு ஹிப்பான் சில நேரங்களில் மஜ்ஹூலானவரை நம்பகமானவர் என்று குறிப்பிட்டு விடுவார். அதேபோன்று இந்த ஸைத் இப்னு அபீ அஸ்ஸாஸா என்பவரிடமிருந்து ஒருவர் மாத்திரமே கேட்டுள்ளார். அவ்வாறே இவரும் ஒருவரிடம் இருந்து மாத்திரமே கேட்டுள்ளார். அதாவது இவர் இது தவிர்ந்த வேறு ஒரு ஹதீஸையும் அறிவிக்கவில்லை. இந்த ஹதீஸை மாத்திரமே அறிவித்துள்ளார்.

மேலேயுள்ள ஹதீஸில் வரக்கூடிய **அல்லாஹ்வைப் புகழ்ந்து, பாவமன்னிப்பு கோரினால்** என்ற வாசகத்தை மஜ்ஹூலான இந்த அறிவிப்பாளர் மாத்திரமே அறிவித்துள்ளார். அத்துடன் இந்த அறிவிப்பாளர் வரிசையிலும் குளறுபடி காணப்படுகின்றது.

இதே ஹதீஸ் அபூதாவுதிலும் 5211ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பிலும் அதே நபர்தான் இடம்பெறுகின்றார். பெயர் சற்று வித்தியாசமாக வருகின்றது. ஸைத் இப்னு அபில் ஹகம் அல் கனஸி என்பதாகும். ஸைத் இப்னு அஸ்ஸாஸா என்பதும் அவருடைய பெயர்தான்.

அபூதாவுதை மீளாய்வு செய்த அர்னஊத் இந்த அறிவிப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது : இதில் வரக்கூடிய ‘‘அல்லாஹ்வைப் புகழ்ந்து, பாவமன்னிப்புக்கோரினால்’’ என்று வரக்கூடிய வாசகம் பலயீனமானது. இதில் வரக்கூடிய ஸைத் இப்னு அபில் ஹகம் அல் கனஸி என்பர் மஜ்ஹூலாகும். ஏனெனில் இவரைத் தொட்டு அபூபல்ஜ் என்பவர் மட்டுமே அறிவித்துள்ளார். அவரும் ஒருவரைத் தொட்டும்தான் அறிவித்துள்ளார். எனவே இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

இருப்பினும், அபூதாவுதில் 5212ம் இலக்கத்தில் பதிவாகியுள்ள பின்வரும் ஹதீஸை சற்று கவனியுங்கள்:

**5212 – حَدَّثَنَا أَبُو بَكْرِ بْنُ أَبِي شَيْبَةَ، حَدَّثَنَا أَبُو خَالِدٍ، وَابْنُ نُمَيْرٍ عَنِ الْأَجْلَحِ، عَنْ أَبِي إِسْحَاقَ، عَنِ الْبَرَاءِ، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «مَا مِنْ مُسْلِمَيْنِ يَلْتَقِيَانِ، فَيَتَصَافَحَانِ إِلَّا غُفِرَ لَهُمَا قَبْلَ أَنْ يَفْتَرِقَا»**

**இரண்டு முஸ்லிம்கள் சந்தித்து, முஸாபஹா செய்து கொண்டால், அவர்கள் இருவரும் பிரிவதற்கு முன்னர் அவர்கள் இருவரது பாவங்களும் மன்னிக்கப்படும்.** ( அபூதாவுத் : 5212 )

இந்த ஹதீஸ் திர்மிதி மற்றும் அஹ்மதிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. திர்மிதியில் 2928ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை அல்பானி தனது அஹாதீஸுஸ் ஸஹீஹா என்ற கிரந்தத்தில் 525ம் இலக்கத்தில் கொண்டு வந்து ஸஹீஹ் என்கின்றார். அபூதாவுத், அஹ்மத், திர்மிதியில் இடம்பெறும் அறிவிப்புக்களில் சிறு குறைபாடுகள் இருந்தாலும் பக்கபலங்களைக் கொண்டு இது ஸஹீஹ் என்ற தரத்திற்குச் செல்கின்றது.

எனவே இரண்டு முஸ்லிம்கள் சந்தித்து, முஸாபஹா செய்து கொண்டால் அவர்கள் பிரிவதற்கு முன்னர் அவர்கள் இருவரது பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற ஹதீஸ் ஸஹீஹானதாகும்.

அவ்வாறே முஸாபஹா செய்யும் ஏதாவது பிரார்த்தித்தால் அப்பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதனை அஹ்மதில் 12451ஆம் இலக்கத்தில் இடம்பெறும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

**عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، عَنْ نَبِيِّ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " مَا مِنْ مُسْلِمَيْنِ الْتَقَيَا، فَأَخَذَ أَحَدُهُمَا بِيَدِ صَاحِبِهِ، إِلَّا كَانَ حَقًّا عَلَى اللهِ أَنْ يَحْضُرَ دُعَاءَهُمَا، وَلَا يُفَرِّقَ بَيْنَ أَيْدِيهِمَا حَتَّى يَغْفِرَ لَهُمَا "**

**இரண்டு முஸ்லிம்கள் சந்தித்து, அதிலே ஒருவர் தன்னுடைய சகோதரருடைய கையைப் பிடித்தால், அவர்களது பிரார்த்தனையை ஏற்றுக்கொள்வது அல்லாஹ்வின்மீது கடமையாகும். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்ற வரையில் அவர்களுடைய கைகள் பிரியாது.** (அஹ்மத் : 12451)

இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தில் இருந்தாலும் மற்றைய பக்க பலங்களை வைத்து ஸஹீஹ் லிகய்ரிஹி ஆகும் என்று அர்னஊத் குறிப்பிடுகின்றார்.

எனவே முஸாபஹா செய்யும்போது ஓதுவதற்குரிய வாசகங்கள் எதுவும் ஹதீஸ்களில் காணப்பட வில்லை. வெறுமனே முஸாபஹா செய்யும்போது அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அத்துடன் அந்நேரத்தில் கேட்கப்படும் பிரார்த்தனைகள்

ஏற்றுக்கொள்ளப்படுகின்றமையால், ஒருவர் விரும்பினால் அந்நேரத்தில் ஏதாவது பிரார்த்தனை செய்து கொள்ளலாம்.

குறிப்பு : முஸாபஹா செய்யும்போது அல்லாஹ்வைப் புகழ வேண்டும் என்பது, எந்தவொரு ஸஹீஹான ஹதீஸ்களிலும் காணப்படவில்லை.